# நீங்கள் தேவனை ஏற்புடைய வகையில் ஆராதிக்கின்றீர்களா?

I. ஆராதனையில் தேவன் விரும்புகின்றவற்றை நீங்கள் பயன் படுத்துகின்றீர்களா?

1. ஆராதனை என்பது ________________ப் பிரியமானதாக இருக்க வேண்டும். 1 பேது. 2:5
2. ஆராதனை என்பது ________________ம் ___________ ம் ஏறெடுக்கப்பட வேண்டும். யோவா. 4:24
3. சத்தியம் என்பது ________________ உண்டாயிருக்கின்றது. யோவா. 1:17
4. அப்போஸ்தலர்கள் ________________ சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தப்பட்டனர். யோவா. 16:13
5. அவர்கள் ________________ கட்டளையிட்ட யாவற்றையும் போதிக்க வேண்டியிருந்தது. மத். 28:18-20

II. தேவன் புறக்கணிக்கின்றவற்றை நீங்கள் பயன்படுத்துகின்றீர்களா?

1. மனிதரின் கட்டளைகளின்படியான ஆராதனை ___________. மாற். 7:7
2. தேவனுடைய கட்டளைகளைத் தள்ளி விடுகின்ற ஒருவர் ________________ பாரம்பரியங்களைப் பின்பற்றுகிறார். மாற். 7:8
3. மனிதரின் பாரம்பரியங்கள் தேவனுடைய வசனத்தை ________________. மாற். 7:13.
4. மனிதருடைய பாரம்பரியங்கள் ______________________ இருப்பதால் அவைகள் நம்மை ________________ கொலோ. 2:8
5. மனிதருடைய கட்டளைகள் ________________ இருந்து (நம்மை) விலக்குகின்றன. தீத்து 1:13


III. நீங்கள் கிறிஸ்துவிடமிருந்து வந்தவற்றையா அல்லது மனிதர்களிடமிருந்து வந்தவற்றையா, எவைகளைப் பயன்படுத்து கின்றீர்கள்?

| கிறிஸ்துவிடமிருந்து | | மனிதர்களிடமிருந்து |
|---|---|---|
| ______________ | லூக். 18:1<br>1 தீமோ. 2:5 | ____________________________ |
| ______________ | லூக் 6:38<br>1 கொரி. 16:2 | ____________________________ |
| ______________ | 1 கொரி. 11:23-26<br>அப். 20:7 | ____________________________ |
| ______________ | எபே. 5:19 | ____________________________ |
| ______________ | 2 தீமோ. 2:2 | ____________________________ |

IV. *நீங்கள் கூட்டியிருக்கின்றீர்களா? அல்லது எடுத்துப் போட்டிருக்கின்றீர்களா?*

1. *நாம் ஒன்றையும் ____________________ அல்லது ____________________, ____________________ கூடாது. வெளி. 22:18, 19*
2. *____________________ உபதேசத்தில் நிலைத்திராமல் ____________________ ____________________ எவனும் ____________________ உடையவனல்ல. 2 யோவா. 9*

Copyright 1992 - Gospel Light Pub. Co. Delight, AR 71940



*பாடத் தாளை எடுத்துரைத்தல்:*

# "நீங்கள் தேவனை ஏற்புடைய வகையில் ஆராதிக்கின்றீர்களா?"

*"நீங்கள் தேவனை ஏற்புடைய வகையில் ஆராதிக்கின்றீர்களா?" என்ற இந்தப் பாடத் தாளை "சபை" என்ற பாடத் தாளுக்குப் பின்போ (பாடம் 5) அல்லது "நிறுவன அமைப்பு" என்ற பாடத் தாளுக்குப் பின்போ (பாடம் 6) படிக்க முடியும். ஆசிரியர் இதை ஒரு தொடக்கப் பாடத் தாளாகப் பயன்படுத்தக் கூடாது.*

### நோக்கம்

*சபையின் தலை என்ற வகையில் இயேசு, தம் சபையானது பயன்படுத்த வேண்டும் என்று அவர் விரும்புகின்றவற்றைப் பற்றிக் கலந்துரையாடுதலே "ஆராதனை" பாடத் தாளின் நோக்கமாக உள்ளது.*

### பாடச் சுருக்கம்

*மனிதர் கீழ்ப்படிய வேண்டிய சகல சத்தியமும் இயேசுவால் பரிசுத்த ஆவியானவர் மூலமாக புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் ஆகியோருக்குத் தரப்பட்டும், அவை எல்லாமே புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டும் உள்ளது என்பதை இந்தப் பாடத் தாள் காண்பிக்கின்றது. இந்த சத்தியமே தேவனை ஆராதிப்பதில் பின்பற்றப்பட வேண்டியதாக உள்ளது. மனிதர்களின் கட்டளைகளும் பாரம்பரியங்களும் மறுக்கப்பட வேண்டியவைகளாயுள்ளன, மற்றும் இயேசுவின் மூலம் வந்த சத்தியத்தை மட்டுமே தேவனை ஆராதிப்பதில் (நாம்) பின்பற்ற வேண்டும்.*

---

### அறிமுகம்

இந்தப் பாடத்திற்காக மாணவரைத் தயார் செய்வதில் ஆசிரியர், ஆராதனை பற்றியும், அதன் நோக்கம் பற்றியும் மற்றும் ஆராதனையில் மிக மேன்மையானவராக மதிக்கப்படுபவர் யார் என்பது பற்றியும் கலந்துரை யாடுவதினால் இந்தப் பாடத்தை அறிமுகப்படுத்தலாம்.

தேவனே ஆராதனையின் மையமாக உள்ளார். மனிதன் ஆராதனையின் மையமாக இருப்பதில்லை. ஆராதனை என்பது நம்மைப் படைத்தவரை மதிக்க, கனப்படுத்த, துதிக்க மற்றும் தேவனை வழிபட நாம் எடுக்கின்ற

*முயற்சியாக இருக்க வேண்டும். தேவனுடன் நமது அன்றாட நடையை நாம் பின்னோக்கிப் பார்க்கையில் தேவன் நம் வாழ்வில் செய்துள்ளவை பற்றிய ஆழ்ந்த சிந்தனையிலிருந்து ஆராதனை வெளிப்பட வேண்டும். தேவன் நமக்குச் செய்துள்ளவற்றை நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், நமது இருதயங்கள் நன்றி செலுத்துதலிலும் மற்றும் துதித்தலிலும் தேவனை நோக்க வேண்டும்.*

*நாம் ஆராதனையில் செய்கின்றவைகள் அவருக்கு நமது கீழ்ப் படிதலையும் அவர் மீதான (நமது) மரியாதையையும் காண்பிக்கும் என்பதை நாம் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். ஜார்ஜ் வாஷிங்டன் அவர்கள், தமது படைத் தலைவர்களுக்கு ஆபாசப் பேச்சுக்களுக்கு மனிதர்களைக் கண்டனம் செய்யும்படி உற்சாக மூட்டுவதற்காக ஒரு ஆணையை எழுதினார். தேவனுடைய உதவிக்காக அவரைத் தொழுது கொள்ளப் பயன்படும் நாவுகள் அவரைக் கனவீனப்படுத்தப் பயன் படுத்தப்படக் கூடாது என்பதே அவரின் இச்செயலுக்கான காரணமாய் இருந்தது. அவரால் கண்டிக்கத் தக்க மொழிநடையைப் பயன்படுத்துவதால், அவருக்கு இப்படிப்பட்ட அவமரியாதையைக் காண்பித்தால், அவர்கள் தேவன் தங்களை ஆசீர்வதிக்கும்படி எதிர்பார்க்க வேண்டியது ஏன்? அது போலவே, தேவனை ஆராதிப்பதற்கான நமது முயற்சிகள் தேவனால் கேட்டுக் கொள்ளப்பட்டிராதவற்றை ஆராதனையில் பயன்படுத்தும் முயற்சிகளினால் அழிக்கப்பட்டு விடக் கூடாது.*

## I. தேவன் எவற்றை விரும்புகின்றார்

*1. ஆராதனையில் எவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்று தேவன் தேர்ந்து கொண்டுள்ளாரா? மனிதன் தேவனை ஆராதிக்க எவற்றைப் பயன்படுத்தும்படி தேவன் விரும்புகின்றார்?* [*1 பேது. 2:5*ஐ வாசிக்கவும்.] *ஆராதனையில் யாருக்குப் பிரியமானதாக இருக்க வேண்டும்?* [கோடிட்ட இடத்தில், ''தேவனுக்கு'' என்று எழுதி நிரப்பவும்.] *ஆராதனையில் பயன்படுத்தப்படுகின்றவை மனிதர்களைப் பிரியப்படுத்துகின்றதா அல்லவா என்பது இங்கு கேள்வியாய் இருப்பதில்லை, ஏனெனில் ஆராதனையில் மையமாய் இருப்பது மனிதனல்ல. நாம் ஆராதனை செய்யும் பொழுது மனிதரையல்ல, தேவனையே பிரியப்படுத்தும்படி நாட வேண்டும். மனிதரைப் பொறுத்தமட்டிலும் நாம் மனிதருக்கு மிகவும் ஈடுபாடுள்ள தயாரிப்புகளை நாம் ஏற்படுத்த முடியும், ஆனால் அது அங்கு கவனத்திற்குரியதல்ல. ஆராதனையில் நமது முயற்சிகள் தேவனைப் பிரியப்படுத்துவதாக இருக்க வேண்டும்.*

*2. ஆராதனையைக் குறித்து இயேசு என்ன கூறினார்? பழைய ஏற்பாட்டின் ஆராதனை ஒழிந்து போகையில், இயேசுவைப் பின்பற்று பவர்கள் எவ்விதம் ஆராதிக்க வேண்டியிருக்கின்றது?* [*யோவா. 4:23, 24*ஐ வாசிக்கவும்.] *ஆராதனையில் கிறிஸ்தவர்கள் உள்ளடக்க வேண்டியவை யாவை?* [கோடிட்ட இடங்களில் "ஆவியிலும்" மற்றும் "உண்மையிலும்" என்று எழுதி நிரப்பவும்.]

*''ஆவியிலும்'' என்பதினால் இயேசு, ஆராதனையில் மனிதரின் உள்ளான பகுதியானது ஈடுபாடு கொண்டிருக்க வேண்டும் என்று*

அர்த்தப்படுத்தியிருக்க வேண்டும். ஆராதனை முறைமையில் மட்டும் ஈடுபட்டு, ஆவிக்குரிய வகையில் ஈடுபாடின்றி இருப்பது என்பது போதுமானதல்ல. "என் இயேசுவே உம்மை நான் அன்புகூருகின்றேன்" என்று ஒருவர் பாடும் பொழுதே அவர் தம் வேலை, பொழுதுபோக்கு ஆகியவற்றின் மீது எண்ணம் கொண்டவராய், தம் இருதயத்தின் உணர்வை வெளிப்படுத்தாமல் இருக்கவும் முடியும், இதனால், "என் இயேசுவே உம்மை நான் அன்புகூருகின்றேன்" என்பது ஆராதனையாகி விடாது. அவருடைய ஆராதனை ஆவியில் இராது.

*ஆவியில் மட்டுமின்றி* ஆராதனை என்பது *உண்மையிலும்* இருக்க வேண்டும். "ஆவி" என்பது பொருளாகவும் "உண்மை" என்பது வடிவமாகவும்/முறையாகவும் உள்ளன. ஒரு பாத்திரத்தில் நீர் வேண்டும் என்று மறைமுகமாய் உணர்த்தும் வண்ணம் ஒருவர் குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டும் என்று கேட்கலாம். அப்போது, தோட்டத்திற்கு நீர் பாய்ச்சும் குழாயுடன் உள்ள ஒருவர் அந்த நபரை நோக்கி (குழாயின் மூலம்) தண்ணீரைப் பீறிட்டு ஓடச் செய்து "இதோ நீங்கள் குடிப்பதற்கான தண்ணீர் இதில் வருகிறதே" என்று கூறலாம். இங்கு *பொருள்* உள்ளது ஆனால் அதைத் தருகின்ற *வடிவம்/முறை* தவறானதாக இருக்கும். இது போலவே, ஒருவர் ஆராதனையில் தேவனிடம் நெருங்கலாம், ஆனால் தேவனைப் பிரியப்படுத்தும் முறையைப் பயன்படுத்துவதில் தவறி விடலாம்.

*3. தேவன் உண்மையை வெளிப்படுத்தியிருக்கின்றாரா? அவர் உண்மையை வெளிப்படுத்தியிருந்தால், அதை எங்கு காண முடியும்?* [யோவா. 1:17ஐ வாசிக்கவும்.] *தேவன் சத்தியத்தை யார் மூலம் வெளிப் படுத்தியிருக்கிறார்?* [கோடிட்ட இடத்தில் "இயேசு கிறிஸ்துவால்" என்று எழுதி நிரப்பவும்.] இயேசுவில் மட்டுமே சத்தியம் உள்ளது (எபே. 4:21). சத்தியமானது மோசே கொண்டு வந்த நியாயப்பிரமாணத்தில் காணப்படுவதில்லை. அந்த நியாயப்பிரமாணம் நிழலாக மட்டுமே இருந்தது (எபி. 10:1). இப்பொழுது நிஜம்/உண்மை நிலை வந்துள்ளது, நாம் இனியும் நியாயப்பிரமாணம் என்ற நிழலுக்குக் கீழானவர்கள் அல்ல (கலா. 3:24, 25; எபே. 2:14, 15; எபி. 7:18, 19). பழைய ஏற்பாட்டின் கீழ் இருந்தவர்களால் ஆராதனையில் பயன்படுத்தப்பட்டவைகள் இயேசு கிறிஸ்துவின் மூலம் வந்த சத்தியத்தில் அடங்கியிராதபட்சத்தில், அவைகள் கிறிஸ்தவர்களால் (ஆராதனையில்) பயன்படுத்தப்படக் கூடாது.

*4. இயேசு வெளிப்படுத்திய சத்தியத்தின் அளவு என்ன?* [யோவா. 16:13ஐ வாசிக்கவும்.] *பரிசுத்த ஆவியானவரால் அப்போஸ்தலர்கள் பெற்றுக் கொண்ட சத்தியத்தின் அளவு என்ன?* [கோடிட்ட இடத்தில் "சகல" என்று எழுதி நிரப்பவும்.] இயேசு மனிதருக்கு வெளிப்படுத்தப் போகின்ற சகல சத்தியமும் அப்போஸ்தலர்களுக்குத் தரப்பட்டது. நடைமுறைப் படுத்தப்படுவது எதாவது அப்போஸ்தலர்களால் போதிக்கப்படாததாக இருந்தால், அது இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டான சத்தியத்தின் ஒரு பகுதியாக இருப்பதில்லை.

[*பாடத் தாளின் பின்புறத்தில்* மேல் பகுதியில் "இயேசு" என்றும், அதன்

கீழ் "பரிசுத்த ஆவி" என்றும், மற்றும் அதன் கீழ் "அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள்" என்றும் எழுதவும். அதற்கும் கீழே ஒரு வட்டம் வரைந்து அதன் மையப் பகுதியில் "சகல சத்தியமும்" என்று எழுதவும். (பக்கம் 226ஐப் பார்க்கவும்)] சபையின் தலையாகிய இயேசு புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் சகல சத்தியத்தையும் வெளிப்படுத்தியிருக்கின்றார். அவர்கள் ஒரு நடைமுறையானது பயன்படுத்தப்பட வேண்டும் என்று போதித்தால், அது இயேசுவிடமிருந்து வந்ததாகவும், இயேசுவால் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் இருக்கின்றது (மத். 18:18).

5. இயேசு பரலோகத்திற்குத் திரும்பச் செல்வதற்குச் சற்று முன்னர், அப்போஸ்தலர்களுக்கு, அறிவுறுத்தல் கொடுத்தார். எல்லா நாடுகளிலுமுள்ள எல்லா மக்களையும் சீஷர்களாக்கி, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, அவர் அப்போஸ்தலர்களுக்குப் போதித்த யாவையும் கடைப்பிடிக்கும்படி அவர்களுக்கு(ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு)க் கற்பிக்குமாறு அப்போஸ்தலர்களிடம் அவர் கூறினார். புதிய கிறிஸ்தவர்கள் கடைப்பிடிக்கும்படியாக அவர்களுக்கு அப்போஸ்தலர்கள் *யாருடைய கட்டளையின்படியான போதனையை போதிக்க வேண்டியதாயிருந்தது?* [மத். 28:20ஐ வாசியுங்கள்.] அவர்கள் போதிக்க வேண்டியவற்றைக் கட்டளையிட்டது *யார்?* [கோடிட்ட இடத்தில் "இயேசு" என்று எழுதி நிரப்பவும்.]

இயேசுவால் தரப்பட்ட இந்த அறிவுறுத்தல் (சிலவற்றை) உள்ளடக்கியதாகவும் (சிலவற்றை) விலக்குவதாகவும் உள்ளது. இயேசு போதித்திருந்தவற்றைக் காட்டிலும் குறைவானவற்றைப் போதித்தல் என்பது போதுமானதாக இராது, மற்றும் இயேசு போதித்திருந்தவற்றைக் காட்டிலும் அதிகமாய்ப் போதித்தல் என்பது, இயேசு போதித்தவற்றை அவர்கள் கைக்கொள்ளும்படி போதித்தல் என்பதாகி விடாது. அது இயேசுவைத் தவிர எவரோ வேறொருவர் போதித்தவற்றைக் கடைப்பிடிக்கும்படி கற்பித்தல் என்பதாகி விடும். அவர்கள் இயேசுவுக்குக் கீழ்ப்படிந்தால், இயேசு அவர்களுக்குப் போதித்தவற்றைக் காட்டிலும் அதிகமாகவோ, அல்லது குறைவாகவோ போதிக்காமல், அவர் கட்டளையிட்ட எல்லாவற்றையும் அவரது பின்பற்றாளர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று போதித்திருப்பார்கள்.

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? ஆவியிலும் உண்மையிலும் ஏறெடுக்கப்படும் ஆராதனையே தேவனுக்குப் பிரியமான ஆராதனையாக உள்ளது என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம். அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாக சகல சத்தியமும் இயேசுவால் தரப்பட்டுள்ளது. இந்த அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளால் போதிக்கப்பட்டுள்ள சத்தியத்தையே இயேசுவின் பின்பற்றாளர்கள் ஆராதனையில் பயன்படுத்த வேண்டியவர்களாய் உள்ளனர்.

## II. தேவன் எவற்றைப் புறக்கணிக்கின்றார்

மனிதர் ஆராதனையில் உள்ளடக்கும் எல்லாவற்றையும் தேவன் ஏற்றுக்

கொள்கின்றாரா? ஆராதனையில் மனிதர் தாம் விரும்பும் எதையும் பயன்படுத்த உரிமை கொண்டுள்ளனரா?

*1.* தேவன் கட்டளையிட்டிராதவற்றை மனிதர் கட்டளையிட்டுள்ளது பற்றிய விஷயம் என்ன? தேவனுடைய கட்டளையின் அடிப்படையில் இல்லாத, மற்றும் மனிதருடைய கட்டளைகளின் அடிப்படையில் அமைந்த ஆராதனையை தேவன் ஏற்றுக் கொள்வாரா? [மாற். 7:7ஐ வாசிக்கவும்.] மனிதருடைய கட்டளைகளின் அடிப்படையிலான ஆராதனைக்கு தேவன் மதிப்பளிக்கின்றாரா? [கோடிட்ட இடத்தில் "வீணானது" என்று எழுதி நிரப்பவும்.] "வீணானது" என்ற வார்த்தை எதனை அர்த்தப்படுத்துகின்றது? "வீணானது" என்றால், பயனற்றது, மதிப்பற்றது, தகுதியற்றது, கனியற்றது என்று அர்த்தப்படுகின்றது. மனிதரால் கட்டளையிடப்பட்டவற்றைக் கொண்டு தேவனை ஆராதிக்க நாடுதல் என்பது தேவனுக்குத் தகுதியற்றதாக உள்ளது.

*2.* ஆராதனையின் ஆதார மூலங்களாக இருக்கச் சாத்தியமானவை இரண்டு மட்டுமே. ஒருவர் ஆராதனையில் பயன்படுத்துகின்றவைகள் தேவனிடமிருந்தோ, அல்லது மனிதரிடம் இருந்தோ வர வேண்டும். ஒருவர், தேவனுடைய கட்டளைகளைப் புறம்பே ஒதுக்கி வைக்கின்றபொழுது, அவர் யாருடைய கட்டளைகளைப் பின்பற்றுபவராய் இருப்பார்? [மாற். 7:8ஐ வாசிக்கவும்.] மனிதர் தேவனைப் பின்பற்றாது இருக்கையில், யாருடைய பாரம்பரியங்களைப் பின்பற்றுகிறவராய் இருக்கின்றார்? [கோடிட்ட இடத்தில் "மனிதரின்" என்று எழுதி நிரப்பவும்.]

யூதமக்கள், மனிதருடைய பாரம்பரியத்தைப் பின்பற்றிக் கொண்டிருந்தமைக்காக இயேசு அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கவில்லை. அதற்குப் பதில், அவர்கள் மனிதப் பராம்பரியங்களைப் பின்பற்றியதற்காக அவர்களை கண்டனம் செய்தார். மனிதர்களின் பாரம்பரியங்களை அல்ல ஆனால் தேவனுடைய சித்தத்தையே மனிதர் பின்பற்ற வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கின்றார்.

*3.* மனிதரின் பாரம்பரியங்களைப் பின்பற்றுகின்றவர்கள் தேவனுடைய வசனத்திற்குச் செய்வது என்ன? [மாற். 7:13ஐ வாசிக்கவும்.] மனிதரின் பாரம்பரியங்கள் தேவ வசனத்தை என்னவாக்குகின்றன? [கோடிட்ட இடத்தில் "அவமாக்குகின்றன" என்று எழுதி நிரப்பவும்.] மனித பாரம்பரியங்களால் தேவனுடைய வார்த்தை அவமாக்கப்படுகின்றது.

கப்பலின் மேல் தளத்தில் இருந்து கடலுக்குள் தவறி விழந்துவிட்ட ஒருவரை நோக்கி உயிர்காப்பு வளையம் ஒன்று வீசப்படும்பொழுது, அது அவரது உயிரைக் காக்க முடியும். இருப்பினும், யாரேனும் இன்னொருவர், கடலில் மூழ்கும் அம்மனிதர் உயிர்காப்பு வளையத்தை நெருங்கி விடாதபடி கற்களைக் கொண்டு, அவரைத் தாக்குவாரென்றால், அவரைக் காப்பதற்காக எறியப்பட்ட உயிர்காப்பு வளையமானது பயனற்றதாக இருந்து விடும். இதைத்தான் மனிதரின் பாரம்பரியங்கள் என்பவை, இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தைப் பின்பற்றாதவாறு ஒருவரைத் தடை செய்யக் கூடிய வகையில் செயல்படுகின்றன.

*4.* மனிதரின் பாரம்பரியங்கள் யாரிடம் இருந்து நமக்கு வருவதில்லை?

[கோடிட்ட இடத்தில் "கிறிஸ்துவிடமிருந்து வராமல்" என்று எழுதி நிரப்பவும்.] *இவைகள் நமக்கு வேறென்ன செய்யக் கூடும்?* [கொலோ. 2:8ஐ வாசிக்கவும்.] *அவைகள் என்ன செய்யக் கூடும்?* [கோடிட்ட இடத்தில் "கொள்ளைக் கொண்டு போய்விடும்" என்று எழுதி நிரப்பவும்.] நாம் செய்கின்ற செயல்கள் மனிதர்களின் போதனைகளின்படியானதாகவோ அல்லது கிறிஸ்துவின் போதனைகளின்படியானதாகவோ உள்ளன. நாம் மனிதரின் போதனையைப் பின்பற்றினால் தேவன் நம்மேல் பிரிய மாயிருப்பாரா? அல்லது நாம் கிறிஸ்துவின் போதனையைப் பின்பற்றினால் தேவன் நம்மேல் பிரியமாய் இருப்பாரா? நாம் செய்கின்ற செயல்கள் மனிதர்களின் போதனைப்படியானதாக இருந்தால், தேவன் அதைப் புறக்கணிப்பார். ஆனால் அது கிறிஸ்துவின் போதனைப்படியானதாக இருந்தால், தேவன் அதை ஏற்றுக் கொள்வார்.

[*பாடத் தாளின் பின்புறத்தில் வட்டத்திற்கு வெளியே மேல் பகுதியில் "மனிதர்களின் பாரம்பரியங்கள்" என்று எழுதி நிரப்பவும். (பக்கம் 226ஐப் பார்க்கவும்)*] மனிதர்களின் உபதேசங்கள் இயேசு கிறிஸ்துவின் சத்தியத்தின்படியானவைகளாய் இருப்பதில்லை. அவை தேவனுக்குப் பிரியமானவைகள் உள்ள வட்டத்தினுள் இருக்க முடியாது.

*5. மனிதர்களின் கட்டளைகளைப் போதிக்கின்றவர்கள் யாராயிருக் கின்றனர்?* [தீத்து 1:13ஐ வாசிக்கவும்.] *மனிதருடைய கட்டளைகளைப் போதிக்கின்றவர்கள் எதிலிருந்து விலகுகின்றவர்களாய் உள்ளனர்?* [கோடிட்ட இடத்தில் "சத்தியத்தில்" என்று எழுதி நிரப்பவும்.] இயேசு கிறிஸ்துவில்தான் சத்தியம் உள்ளது. மனிதருடைய கட்டளைகளை உபதேசிப்பவர்கள் சத்தியத்திலிருந்து விலகியவர்களாய் இருக்கின்றார்கள், மற்றும் இக்காரணத்தினால் அவர்கள் இயேசுவைவிட்டு விலகியவர்களாக இருக்கின்றார்கள்.

*இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன?* மனிதரிடத் திலிருந்து தோன்றக் கூடிய ஆராதனைச் செயல்பாடுகளைத் தேவன் புறக்கணிக்கின்றார் என்று நாம் கற்றுள்ளோம். மனிதருடைய பாரம் பரியங்களாய் மட்டுமே உள்ள விஷயங்களை ஆராதனையில் பயன் படுத்துவதென்பது தேவனுடைய பார்வையில் பயனற்றவையாய் உள்ளன. நாம் பின்பற்ற, இயேசு கிறிஸ்துவின் மூலம் உண்டான சத்தியம் அல்லது மனிதர்களின் பாரம்பரியங்கள் என்ற இரண்டு தெரிவுகளை மட்டும் கொண்டவர்களாக இருக்கின்றோம். இயேசுவின் மூலம் வந்துள்ளவற்றை தேவன் ஏற்றுக் கொள்கின்றார், ஆனால் மனிதர் மூலம் உண்டானவற்றை அவர் புறக்கணிக்கின்றார்.

## III. கிறிஸ்துவிடமிருந்தா அல்லது மனிதர்களிடமிருந்தா

ஒரு செயல்முறையானது தேவனுக்குப் பிரியமானதா என்று முடிவு செய்வதற்கு, நாம் அதன் தோற்றத்தைத் தீர்மானம் செய்ய வேண்டும். நாம் செய்யும் செயல்முறைகள், இயேசு, அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசி களின் போதனையில், அதாவது புதிய ஏற்பாட்டில் காணப்பட முடியு மென்றால், தேவன் அதை ஏற்றுக் கொள்வார் என்று நாம் அறிகின்றோம்,

ஆனால் அங்கு நாம் அதைக் காண முடியாதென்றால், அது மனிதரிலிருந்து தோன்றுகின்றது மற்றும் அது புறக்கணிக்கப்பட வேண்டும் என்று நாம் அறிகின்றோம்.

நாம் என்ன செய்ய வேண்டும் என்று லூக். 18:1 மற்றும் 1 தீமோ. 2:5 ஆகியவற்றில் கூறப்படுகின்றது? ["கிறிஸ்துவிடமிருந்து" என்பதன் கீழ் உள்ள முதல் கோடிட்ட இடத்தில் "ஜெபித்தல்" என்று எழுதி நிரப்பவும்.] நாம் தேவனிடத்தில் ஜெபித்தால், இது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்குமா? இயேசு நமது மத்தியஸ்தர் என்ற வகையில் அவர் மூலமாய் ஜெபித்தால் இது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்குமா? இது புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டுள்ள காரணத்தினால் இது ஏற்றுக் கொள்ளப்படக் கூடியது என்று நாம் அறிகின்றோம். பழைய ஏற்பாட்டில் அவர்கள் இயேசுவின் மூலமாக ஜெபித்ததில்லை. பழைய ஏற்பாட்டில் அவர்கள் செய்தவற்றை நாம் செய்ய வேண்டுமா?

ஜெபங்களுடன் தொடர்புடைய சில மனித பாரம்பரியங்கள் யாவை? சிலர் மரியாள் மூலமாக ஜெபிக்கின்றனர்? சிலர் தூபவர்க்கத்தைப் பயன்படுத்துகின்றனர்? சிலர் புனிதர்களிடம் ஜெபிக்கின்றனர்? சிலர் மணிகளை(ஜெப மாலையை)ப் பயன்படுத்துகின்றனர்? [''மனிதர்களிடமிருந்து'' என்பதன் கீழ் உள்ள முதல் கோடிட்ட இடத்தில் மனிதர்களிடமிருந்து வந்த இவைகளை எழுதி நிரப்பவும்.] இந்த நடைமுறைகளைத் தேவன் ஏற்றுக் கொள்கின்றாரா? இந்த நடைமுறைகள் தேவனிடமிருந்து வந்தனவா அல்லது மனிதரிடமிருந்து வந்தனவா? பழைய ஏற்பாட்டில் அவர்கள் தூபவர்க்கத்தைப் பயன்படுத்தினார்களா? அவர்கள் செய்ததுபோல நாமும் நமது ஜெபங்களுடன் தூபவர்க்கத்தைப் பயன்படுத்த வேண்டுமா?

இவைகளை நாம் நடைமுறைப்படுத்தப் போகிறோமென்றால், இவைகள் எங்கு போதிக்கப்பட்டிருக்க நாம் காண வேண்டும்? இவை புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டிருக்க நாம் காண வேண்டும். இவை புதிய ஏற்பாட்டில் காணப்பட முடியாதென்றால், இவை மனிதரின் பாரம்பரியங்களாக, பயனற்றவைகளாக உள்ளன, மற்றும் இவை தவிர்க்கப்பட வேண்டும்.

ஆராதனையில் இன்னும் என்ன பயன்படுத்தப்பட வேண்டும்? [லூக். 6:38; 1 கொரி. 16:2 ஆகியவற்றை வாசிக்கவும்.] நாம் என்ன செய்யும்படி இயேசு கட்டளையிட்டுள்ளார்? ["கிறிஸ்துவிடமிருந்து" என்பதன் கீழ் உள்ள இரண்டாவது கோடிட்ட இடத்தில் "கொடுத்தல்" என்று எழுதி நிரப்பவும்.] இது இயேசுவிடமிருந்து வந்ததா அல்லது மனிதர்களிடமிருந்து வந்ததா? இது இயேசுவிடமிருந்து வந்ததென்றால், இது ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாக உள்ளது, ஆனால் இது மனிதர்களிடமிருந்து வந்ததென்றால், இது தவிர்க்கப்பட வேண்டியதாக உள்ளது. கொடுத்தல் என்பது இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் ஆகியோரிடமிருந்து வந்தது என்பதால் இது தேவனுக்கு ஏற்புடையது என்று நாம் அறிகின்றோம்.

மனிதர்கள் தங்கள் "சபைகளை" ஆதரித்துத் தாங்குவதற்காகப் பணம் சம்பாதிக்க அறிமுகப்படுத்தியவை யாவை? ''மனிதர்களிடமிருந்து''

என்பதற்குக் கீழ் உள்ள இரண்டாவது கோடிட்ட இடத்தில் "ரொட்டி விற்பனை, சீட்டுக் குலுக்கல், பல பொருட்கள் விற்பனை, தசம பாகம் முதலியன" என்று எழுதி நிரப்பவும்.] இவைகள் கிறிஸ்துவிடமிருந்து வந்தனவா அல்லது மனிதர்களிடமிருந்து வந்தனவா? இவைகள் கிறிஸ்துவிடமிருந்து வந்திருந்தால் அவரது போதனையில் இவைகள் காணப்பட முடியும், ஆனால் அவ்வாறு இல்லாதிருந்தால், இவைகள் மனிதரிடமிருந்து வந்தவையாகவும், புறக்கணிக்கப்பட வேண்டியவை யாகவும் உள்ளன. இந்த நடைமுறைகளை இயேசு அல்லது அப்போஸ்தலர்கள் ஆகியோரின் போதனையில் நாம் காண்பது இல்லை. தசம பாகம் கொடுப்பதென்பது பழைய ஏற்பாட்டில் கட்டளையிடப் பட்டுள்ளதா? தசம பாகம் கொடுப்பதென்பது பழைய ஏற்பாட்டில் கட்டளையிடப்பட்டுள்ளதா? தசம பாகம் கொடுத்தல் என்பது இயேசுவாலும் அப்போஸ்தலர்களாலும் போதிக்கப்பட்டுள்ளதா? தசம பாகம் கொடுத்தல் என்பது இன்றைய நாட்களில் நமக்கானது என்றால், அது இயேசுவால் கட்டளையிடப்பட்டிருக்கப்பட வேண்டும். அது இயேசுவின் கட்டளையாய் இருந்ததென்றால், அது அவருடைய அல்லது அப்போஸ் தலர்களுடைய போதனையில் காணப்பட வேண்டும். அது இயேசுவின் போதனையில் காணப்படாததால், அது மனிதர்களின் கட்டளை என்ற வகையில் புறக்கணிக்கப்பட வேண்டியதாக உள்ளது.

கிறிஸ்துவின் சபையில் இன்னும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது வேறு என்ன உள்ளது? [1 கொரி. 11:23-26; அப். 20:7 ஆகியவற்றை வாசிக்கவும்.] எதில் பங்கேற்கும்படி இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டார்? ["கிறிஸ்துவிடமிருந்து" என்பதற்குக் கீழ் உள்ள மூன்றாவது கோடிட்ட இடத்தில் "கர்த்தருடைய பந்தி" என்று எழுதி நிரப்பவும்.] கர்த்தருடைய பந்தி என்பது கிறிஸ்துவிடமிருந்து வந்துள்ளதா அல்லது மனிதர்களிடமிருந்து வந்துள்ளதா? அது கிறிஸ்துவிடமிருந்து வந்துள்ளதென்றால், அதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோம், ஆனால் அது மனிதர்களிடமிருந்து வந்ததென்றால், நாம் அதைப் புறக்கணிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். இயேசு வருகின்ற வரைக்கும் நாம் அப்பத்தை உண்டு, திராட்சை இரசத்தை அருந்த வேண்டியவர்களாய் இருக்கின்றோம், ஏனெனில் இயேசுவே தம்மை நாம் இவ்விதமாய் நினைவுகூர வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

ஓய்வு நாளான சனிக்கிழமையன்றல்ல ஆனால், வாரத்தின் முதல் நாளிலேயே கிறிஸ்தவர்கள் ஒன்று கூடினார்கள் (மத். 28:1; மாற். 16:1; லூக். 22:1; யோவா. 20:1). கிறிஸ்தவர்கள், அப்போஸ்தலர்களின் வழி நடத்துதலின் கீழ் இருந்தனர், எனவே கர்த்தருடைய பந்தியை வாரத்தின் முதல் நாளில் ஆசரித்தல் என்பது இயேசுவிடமிருந்து வந்ததாக இருக்க வேண்டும். கர்த்தருடைய பந்தியில் பங்கேற்பதினால் இயேசுவை நினைவு கூருவதற்காக வாரத்தின் முதல் நாளில் நாம் கூடிவரும் பொழுது நாம் மனிதர்களிடமிருந்து வந்ததை அல்ல ஆனால் இயேசுவிடமிருந்து வந்த நடைமுறையைச் செயல்படுத்துகின்றோம்.

கர்த்தருடைய பந்திக்கு மனிதர்கள் செய்துள்ளது என்ன? சிலர் திராட்ச

இரசத்தை மக்களுக்குத் தராமல் வைத்துக் கொண்டுள்ளனர். சிலர் திராட்ச இரசத்திற்குப் பதிலாகத் தண்ணீரைப் பயன்படுத்துகின்றனர். சிலர் கர்த்தருடைய பந்தியை ஆண்டிற்கொருமுறையோ, காலாண்டிற்கொரு முறையோ, மாதத்திற்கு ஒருமுறையோ அல்லது வாரத்தின் எந்த நாளிலுமோ கடைப்பிடிக்கின்றனர். ["மனிதர்களிடமிருந்து" என்பதின் கீழ் உள்ள மூன்றாவது கோடிட்ட இடத்தில் "தண்ணீர், ஒரு பொருள் (மட்டும்), மற்றும் ஆண்டிற்கொருமுறை'' என்று எழுதி நிரப்பவும்.] இந்த நடைமுறைகள் கிறிஸ்துவிடமிருந்து வந்துள்ளனவா அல்லது மனிதர் களிடமிருந்து வந்துள்ளனவா? இவைகள் கிறிஸ்துவிடமிருந்து வந்துள்ளன என்றால், இவைகள் இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் ஆகியோரின் போதனையில் காணப்பட வேண்டும். அங்கு இவைகள் காணப்பட வில்லையென்றால், இவைகள் மனிதர்களிடமிருந்து வந்தவையாகவும், புறக்கணிக்கப்பட வேண்டியவைகளாகவும் உள்ளன. இவைகள் இயேசுவின் போதனையில் காணப்படுவதில்லை, எனவே இவைகள் மனிதர்களின் போதனை என்ற வகையில் புறக்கணிக்கப்பட வேண்டும்.

பழைய உடன்படிக்கையின் கீழ் இருந்த மக்கள் எகிப்திய அடிமைத் தளையிலிருந்து தங்கள் விடுதலையை ஓய்வுநாளில் (அதாவது, சனிக்கிழமை யில்) நினைவுகூர்ந்தார்கள். ஓய்வுநாளை கிறிஸ்தவர்கள் இவ்வகையில் கடைப்பிடிக்க வேண்டுமா? இப்படிப்பட்ட ஒரு நடைமுறையானது இயேசுவின் உபதேசத்தில் காணப்படுவதில்லை, எனவே இது நடைமுறைப் படுத்தப்படலாகாது.

ஆதி சபையார் ஆராதனையில் இன்னும் வேறென்ன செய்தார்கள்? [எபே. 5:19ஐ வாசிக்கவும்.] அவர்கள் என்ன செய்தார்கள்? ["கிறிஸ்துவிட மிருந்து" என்பதன் கீழ் உள்ள நான்காவது கோடிட்ட இடத்தில் "பாடுதல்" என்று எழுதி நிரப்பவும்.] கிறிஸ்தவர்களுக்குப் பாடும்படி அறிவுறுத்தப் பட்டது.

தேவனுடைய ஆராதனையில் பாடுதலுக்கும் அப்பால் அதனுடன் மனிதர்கள் உள்ளடக்கியவை யாவை? ["மனிதர்களிடமிருந்து" என்பதன் கீழ் உள்ள நான்காவது கோடிட்ட இடத்தில் "பியானோ, அர்மோனியம், கிதார் முதலியன" என்று எழுதி நிரப்பவும்.] ஆராதனையில் இவைகள் பயன்படுத்தப்பட வேண்டியவைகளாய் இருந்தால், இவைகள் இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் ஆகியோரின் போதனையில் காணப்பட வேண்டும். இவைகள் இயேசுவின் போதனையில் காண முடியாது, எனவே இவைகள் மனிதர்களிடமிருந்து வந்தவையாய் இருக்க வேண்டும், இந்தக் காரணத்தினால் இவைகள் புறக்கணிக்கப்பட வேண்டும்.

பழைய ஏற்பாட்டு ஆராதனையில் இசைக் கருவிகள் பயன்படுத்தப் பட்டனவா? ஆலய ஆராதனையில் அவைகள் ஒரு அங்கமாயிருந்தன. பழைய ஏற்பாட்டு ஆராதனையில் பயன்படுத்தப்பட்டவற்றை கிறிஸ்தவர்கள் பயன்படுத்த வேண்டுமா? இயேசுவால் கட்டளையிடப் பட்டவற்றையே கிறிஸ்தவர்கள் பயன்படுத்த வேண்டும். எனவே அவர்கள் தேவனுடைய ஆராதனையில் இசைக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கு முன்பாக, அவைகளின் பயன்பாட்டிற்கான அறிவுறுத்துதலை இயேசுவின்

போதனையில் காண வேண்டும். அவைகள் இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் ஆகியோரின் போதனையில் காணப்படுவதில்லை, எனவே அவைகள் மனிதர்களிடமிருந்து வந்தவை என்ற வகையில் புறக்கணிக்கப்பட வேண்டும். பாடுதல் என்பது மட்டுமே புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டு மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரே வகையான இசையாய் இருக்கின்றது, எனவே இது ஒன்று மட்டுமே இன்றைய நாட்களிலும் பயன்படுத்த வேண்டிய ஒரே இசையாக இருத்தல் வேண்டும்.

புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்ட இன்னொரு நடைமுறை என்ன? அவர்கள் என்ன செய்யும்படி அறிவுறுத்தப்பட்டார்கள்? [2 தீமோ. 2:2ஐ வாசிக்கவும்.] அவர்கள் என்ன செய்ய வேண்டியவர்களாய் இருந்தார்கள்? ["கிறிஸ்துவிடமிருந்து" என்பதன் கீழுள்ள ஐந்தாவது கோடிட்ட இடத்தில் "போதித்தல்" என்று எழுதி நிரப்பவும்.] போதித்தல் மூலம் அவருடைய மக்களை ஈர்த்து அறிவுறுத்துதல் என்பது தேவனுடைய வழியாக உள்ளது.

மனிதர்கள் என்ன செய்துள்ளனர்? ["மனிதர்களிடமிருந்து" என்பதன் கீழ் உள்ள ஐந்தாவது கோடிட்ட இடத்தில் "கைக் கூலி, பலவந்தம் மற்றும் பொழுதுபோக்கு" என்று எழுதி நிரப்பவும்.] இயேசுவின் போதனைகளை மக்கள் பின்பற்றும்படி செய்வதற்கு இப்படிப்பட்ட அணுகுமுறைகள் இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் ஆகியோரின் போதனைக்கு அந்நியமாய் உள்ளன. அவர்கள் போதித்தவற்றில் இவைகள் காணப்படாததால், இப்படிப்பட்ட நடைமுறைகள் மனிதர்களிடமிருந்து வந்ததாக இருக்க வேண்டும் என்பது தெளிவு, எனவே இவை தவிர்க்கப்பட வேண்டும். கடந்த கால வரலாற்றில் தேவபக்தியற்றவர்களை இயேசுவைப் பின்பற்றச் செய்வதற்கு மனிதர்கள், அந்த மக்களுக்குப் பணம் கொடுத்தல் அல்லது மற்ற வகையிலான கைக் கூலி கொடுத்தல் அல்லது படைபலத்தைப் பயன்படுத்துதல் போன்ற செயல்களைச் செய்துள்ளனர். அதிக வருகையை பெறுவதற்கு மனிதர்கள் நாடிய இன்னொரு வழி பொழுதுபோக்கு என்பதாகும். போதிக்கப்பட்டவர்களே இயேசுவிடம் வந்து, அவரைப் பின்பற்றத் தொடர்ந்தனர் (யோவா. 6:45). இது இயேசுவிடமிருந்து வருகின்றது.

[பாடத் தாளின் பின்புறத்தில், வட்டத்தினுள், "ஜெபித்தல்," "கொடுத்தல்," "கர்த்தருடைய பந்தி," "பாடுதல்," "போதித்தல்" என்று எழுதவும். வட்டத்தின் வெளிப்புறத்தைச் சுற்றிலும் "மனிதர்களின் பாரம்பரியங்கள்" என்பதன் கீழ், "மரியாளிடம் ஜெபித்தல்," "தூபவர்க்கம்," "சீட்டுக் குலுக்கல்கள்," "அப்பம் மட்டும்," "பியனோ," "அர்மோனியம்," "கைக் கூலி," "பலவந்தம்" என்பவற்றை எழுதவும். (பக்கம் 226ஐப் பார்க்கவும்)]

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? இயேசுவால் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்தைப் பின்பற்ற நாடுகின்றவர்கள் இயேசுவால் போதிக்கப்பட்டவற்றை மட்டுமே பின்பற்றுகின்றனர் என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம். இவர்கள், மனிதர்களிடமிருந்து தோன்றியவைகளைப் பயன்படுத்துவதன் மூலமாகத் தேவனை ஆராதிக்க நாடுவதில்லை. இவர்கள் கொடுத்தல், ஜெபித்தல், கர்த்தருடைய பந்தியில்

*பங்கு பெறுதல், பாடுதல் மற்றும் போதித்தல் ஆகியவற்றில் ஈடுபடுவார்கள். இயேசுவில் தொடக்கம் பெறாத ஏதொன்றையும் இவர்கள் (ஆராதனையில்) உள்ளடக்குவதில்லை.*

## IV. கூட்டுதல் அல்லது எடுத்துப் போடுதல்

*நாம் (ஆராதனையில்) பயன்படுத்தும்படி இயேசு நமக்குக் கூறியுள்ளவற்றைப் பயன்படுத்துவதினால் தேவனை ஆராதிக்க நாடுகின்றீர்களா? கிறிஸ்தவ ஆராதனையில் மனிதர்களால் அறிமுகப் படுத்தியுள்ளவற்றை நீங்கள் பயன்படுத்துகின்றீர்களா?*

*1. நாம் எவற்றைச் செய்யக் கூடாது?* [வெளி. 22:18, 19ஐ வாசிக்கவும்.] *எதைச் செய்பவர்கள் மீது இயேசு சாபம் கூறினார்?* [கோடிட்ட இடங்களில் "கூட்டவோ" மற்றும் "எடுத்துப் போடவோ" என்று எழுதி நிரப்பவும்.] *இக்கூற்றானது வெளிப்படுத்தின விசேஷம் என்ற புத்தகம் பற்றி ஏற்படுத்தப் பட்டதாக உள்ளது. இதை ஏற்றுக் கொள்ள வேண்டும். வேதாகமத்தின் மற்ற புத்தகங்களை விட வெளி. புத்தகத்தைப் பற்றி தேவன் அதிகமாய் எண்ணுகின்றாரா அல்லவா என்பதே இங்கு கேள்வியாக உள்ளது. வெளி. புத்தகத்தை நாம் மாற்றக் கூடாது ஆனால் வேதாகமத்தின் மற்ற எந்தப் புத்தகத்தையும் மாற்றியமைப்பது சரியானதுதான் என்று தேவன் விரும்புகின்றதில்லையல்லவா? வேதாகமத்தின் மற்ற எல்லாப் புத்தகங்களையும் தேவன் இவ்விதமாகவே கண்ணோக்குகின்றார் என்பது உறுதி. இப்படிப்பட்ட (வெளி. புத்தகத்தை மட்டும் மாற்றியமைக்கக் கூடாது என்ற) கருத்தாய்வானது வேதாகமத்தின் எஞ்சிய உபதேசங் களுடன் சீர் பொருந்துவதாக உள்ளது (உபா. 4:2; 12:32; நீதி. 30:6).*

*2. தேவனோடும் இயேசுவோடும் உள்ள உறவைத் துண்டித்துக் கொள்பவர் யார்?* [2 யோவா. 9ஐ வாசிக்கவும்.] *இயேசுவோடும் தேவனோடும் உள்ள நம் உறவைப் பாதிப்பது எது?* [கோடிட்ட இடங்களில் "கிறிஸ்துவின்," "மீறி நடக்கிற" மற்றும் "தேவனை" என்று எழுதி நிரப்பவும்.] *"மீறி நடத்தல்" என்றால், "அப்பால் செல்லுதல், எல்லைகளுக்குப் புறம்பே செல்லுதல்" என்று அர்த்தப்படுகின்றது. இதைச் செய்பவர்கள் தேவனை உடையவர்கள் அல்ல.*

*இந்தப் பாடத் தாளின் பின்புறம் உள்ள வரைபடத்தைக் கவனியுங்கள். சகல சத்தியமும் இயேசுவால் தரப்பட்டுள்ளது. அவருடைய உபதேசத்திற்குப் புறம்பே, வட்டத்திற்கு வெளியே* [வட்டத்தின் உள்ளிருந்து வெளிப்புறமாக அம்புக் குறி(கள்) வரையவும்.] *செல்லுகின்றவர்கள் இயேசுவின் போதனையை விட்டு மனிதர்களின் போதனைக்குள் செல்லுபவர்களாய் உள்ளனர். இதைச் செய்பவர்கள் தேவனை உடையவர்கள் அல்ல. இயேசுவின் போதனையில் நிலைத்திருப்பவர்களே பிதாவையும் குமாரனையும் உடையவர்களாய் இருக்கின்றனர்.*

*இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன?* நாம் இயேசுவின் போதனையில் நிலைத்திருக்க வேண்டும் என்று கற்றுக் கொண்டுள்ளோம். *நாம், அவர் போதித்தவற்றுடன் ஒன்றையும் கூட்டவோ அல்லது அவர் போதித்தவற்றிலிருந்து ஒன்றையும் எடுத்துப் போடவோ கூடாது.*

இப்பொழுது பகுதி IIIக்குத் திரும்புங்கள், ''கிறிஸ்துவிடமிருந்து'' மற்றும் ''மனிதர்களிடமிருந்து'' என்பவற்றின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களைப் பற்றிக் கேள்விகளைக் கேளுங்கள். ஒருவர் இயேசுவின் மூலமாக ஜெபித்தால், தம் வரவுக்குத் தக்கவாறு கொடுத்தால், வாரத்தின் முதல் நாளில் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றால், அவர் பாடினால், மற்றும் அவர் போதித்தால், அவர் இயேசு போதித்தவற்றுடன் கூட்டுகிறவராய் இருக்கின்றாரா? இயேசு போதித்தவற்றிலிருந்து எடுத்துப் போடுகின்றவராய் இருக்கின்றாரா?

ஒருவர் மரியாளிடம் ஜெபித்தால், அவர் கூட்டுகின்றாரா? அவர் எடுத்துப் போடுகின்றாரா? அவர் கூட்டுகின்றார், மற்றும் அவர் இயேசுவின் மூலமாய் ஜெபிக்காதிருந்தால் அவர் எடுத்துப் போடுகின்றார். ஒருவர் தம் ஜெபத்துடன் தூபவர்க்கத்தைப் பயன்படுத்தினால், அவர் கூட்டுகின்றார்.

ஒருவர் சீட்டுக் குலுக்கல்கள், ரொட்டி விற்பனை, மற்றும் பல்பொருட்கள் விற்பனை ஆகியவற்றை (சபை தொடர்பாக) மேற் கொண்டால் அவர் கூட்டுகின்றாரா? அல்லது எடுத்துப் போடுகின்றாரா? இவற்றைச் செய்வதினால் அவர் கூட்டுகின்றார், மற்றும் அவர் இவற்றைப் பயன்படுத்திக் கொண்டு, (காணிக்கை) கொடுக்காதிருந்தால், கொடுக்கா திருப்பதினால் அவர் எடுத்துப் போடுபவராய் இருக்கின்றார்.

ஒருவர், கர்த்தருடைய பந்தியில் அப்பத்தை மட்டும் பயன் படுத்தினால், அவர் எடுத்துப் போட்டுள்ளாரா? அவர் திராட்ச ரசத்திற்குப் பதிலாக தண்ணீரைப் பயன்படுத்தினால், அவர் எடுத்துப் போட்டு மற்றும் கூட்டுகின்ற செயலையும் செய்துள்ளார். வாரந்தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்காதது என்பது எழுதப்பட்டவற்றினின்று எடுத்துப் போடுவதாக உள்ளது. கர்த்தருடைய பந்தியின் அப்பத்தின் மீது ஒருவர் (திராட்ச ரசத்திற்குப் பதிலாக) ஆப்பிள் சாற்றையோ அல்லது வெண்ணெய் மற்றும் ஜெல்லி ஆகியவற்றையோ தடவுவாரென்றால் அவர் வசனத்தில் போதிக்கப்பட்டவற்றுடன் கூட்டுபவராகவும், வசனத்தை எடுத்துப் போடுபவராகவும் இருக்கிறார். இப்படிப்பட்டவைகள் புறக்கணிக்கப்பட வேண்டும்.

ஒருவர் (ஆராதனையில்) இசைக் கருவிகளைப் பயன்படுத்தினால், அவர் கர்த்தருடைய ஆராதனையுடன் ஒன்றைக் கூட்டுகின்றார். பாடுதலுக்குப் பதிலாக இசைக் கருவி பயன்படுத்தப்பட்டதென்றால் அவர் கூட்டுபவராகவும், எடுத்துப் போடுகின்றவராகவும் இருக்கின்றார்.

போதித்தலுக்குப் பதிலாக, கைக்கூலிகள், பலவந்தம் அல்லது பொழுதுபோக்கு ஆகியவை பயன்படுத்தப்பட்டால், ஒருவர் கூட்டுபவ ராகவும் எடுத்துப் போடுபவராகவும் இருக்கின்றார். ஒருவர் இவைகளைச் செய்து கொண்டு போதிப்பார் என்றால், அவர் கூட்டுகின்றார்.

இயேசு சபைக்குத் தலைவராக இருக்கின்றார். ஆராதனை யாவும் புதிய ஏற்பாட்டில் அவருடைய வசனத்தில் போதிக்கப்பட்டவற்றின்படியாகவே இருக்க வேண்டும்.

## தொகுப்புரை

*இந்தப் பாடத்தில் நாம், தேவனை ஆராதிக்க எவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்று சிந்திக்கையில் நம்மை வழி நடத்த வேண்டிய கொள்கைகளை ஆராய்ந்தறிந்தோம். தேவனுக்கான ஆராதனையில் நாம் தேவனுக்குப் பிரியமானவற்றைச் செய்வதில் நிச்சயமாயிருக்க வேண்டும்.*

I. *ஆராதனையில் தேவன் விரும்புகின்றவற்றை நீங்கள் பயன்படுத்து கின்றீர்களா?* ஆவியோடும் உண்மையோடும் உள்ள ஆராதனையைத் தேவன் விரும்புகின்றார். சகல சத்தியமும் இயேசுவின் மூலமாக உண்டானதாகவும், புதிய ஏற்பாட்டின் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இருக்கின்றது. இயேசு கட்டளையிட்ட யாவற்றையும் நாம் கடைப்பிடிக்க வேண்டியவர்களாயிருக்கின்றோம்.

II. *தேவன் புறக்கணிக்கின்றவற்றை நீங்கள் பயன்படுத்துகின்றீர்களா?* மனிதர்களின் பாரம்பரியங்களையும் கட்டளைகளையும் தேவன் புறக்கணிக்கின்றார். இயேசுவால் போதிக்கப்பட்டுள்ளவற்றை மட்டுமே அவர் ஏற்றுக் கொள்ளுகின்றார். மனிதர்களுடைய போதனையின்படி நாம் தேவனை ஆராதிக்க நாடினால், நமது ஆராதனை பயன் அற்றதாயிருக்கும்.

III. *நீங்கள் கிறிஸ்துவிடமிருந்து வந்தவற்றையா அல்லது மனிதர் களிடமிருந்து வந்தவற்றையா, எவைகளைப் பயன்படுத்துகின்றீர்கள்?* நாம் ஜெபிக்க, கொடுக்க, ஒவ்வொரு வாரமும் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்க, பாட மற்றும் போதிக்க வேண்டும் என்று இயேசு விரும்புகின்றார் என்பதாக நாம் கற்றோம். இவைகளுடன் தொடர்புடையவைகளென்று பல விஷயங்களை மனிதர்கள் அறிமுகப் படுத்தியிருக்கின்றனர் மற்றும் நாம் செய்யும்படி இயேசு கூறியவற்றை அவர்கள் மாற்றியிருக்கின்றனர்.

IV. *நீங்கள் கூட்டியிருக்கின்றீர்களா அல்லது எடுத்துப் போட்டிருக்கின்றீர்களா?* நாம் எதையும் கூட்டவோ எடுத்துப் போடவோ கூடாது என்று வேதாகமம் போதிக்கின்றது. இயேசுவால் கட்டளையிடப் பட்டவற்றுடன் மனிதர்கள் சிலவற்றைக் கூட்டியுள்ளனர் அல்லது அதிலிருந்து சிலவற்றை எடுத்துப் போட்டுள்ளனர். நாம் தேவனையும் கிறிஸ்துவையும் உடையவர்களாய் இருப்பதற்கு, நாம் மனிதர்கள் ஏற்படுத்திய இந்த மாற்றங்களைப் பின்பற்றாதவர்களாய் இருக்க வேண்டும்.

*இயேசு ஒருவரே சட்டம் கொடுப்பவராய் இருக்கின்றார் (யாக். 4:12). செயல்முறைகளை நிலைநாட்டுவதற்கும் சட்டங்களை ஏற்படுத்துவதற்கும் மனிதர்களுக்கு உரிமையில்லை. இயேசு மட்டுமே அந்த உரிமையைக் கொண்டுள்ளார்.*

*அடுத்த பாடத்திற்கான ஒரு நேரத்தை ஏற்பாடு செய்யுங்கள்*